# விண்ணப்பதாரர்களுக்கு தேவைப்படும் முக்கிய குறிப்புகள்

1. விண்ணப்பப் படிவத்தில் குறிமுறையாக்கத் தாளில் (Coding Sheet) உள்ள விண்ணப்ப எண்ணை தெளிவாக எழுதவும். அதுவே உங்களுடைய தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை பதிவு எண் ஆகும்.

2. தங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியை தெளிவாக எழுதவும்.

3. தங்களுடைய தற்போதைய புகைப்படத்தை ஒட்டி அதில் உரிய அதிகாரியிடம் இருந்து சான்றொப்பம் (Attestation) பெறவும்.

4. தங்களுடைய மேல்நிலைப் பள்ளி மாற்று சான்றிதழில் (+2 TC) குறிப்பிட்டுள்ளபடி பிறந்த தேதியை எழுதவும். (TC-ன் நகலை இணைக்கவும்).

5. தங்களுடைய பாலினத்தை (Gender) குறிப்பிடவும்.

6. தங்களுடைய வகுப்பை (Community) குறிப்பிடவும்.

7. தங்களுடைய சாதியின் பெயரை தெளிவாக எழுதவும். கொடுக்கப்பட்டுள்ள பிற்சேர்க்கை 1 – ல் (Annexure-I) உள்ளவாறு தங்கள் சாதியின் பெயருக்குரிய எண்ணை எழுதவும். ST / SC / SCA / MBC & DNC / BC / BCM பிரிவு விண்ணப்பதாரர்கள் அதற்கு அத்தாட்சியாக நிரந்தர சாதி சான்றிதழ் உரிய அலுவலரிடமிருந்து பெற்று நகலை இணைக்கவும். சாதி சான்றிதழ் இணைக்கப்படவில்லை எனில், பொதுப் பிரிவில் மட்டும் கருதப்படுவார்கள்.

| | | |
|---|---|---|
| 1. | ST | வருவாய் கோட்டாட்சியர் (RDO) / துணை ஆட்சியர் (Sub Collector) |
| 2. | SC / SCA | வருவாய் வட்டாட்சியர் (Tahsildar) |
| 3. | MBC & DNC / BC / BCM | தலைமை இடத்து துணை வட்டாட்சியர் / துணை வட்டாட்சியர் (சான்றிதழ்கள்) |

8. தாங்கள் இந்திய குடிமகனா இல்லையா என்பதை குறிப்பிடவும். இந்திய குடிமக்கள் அல்லாதவர்களுடைய விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

9. தாங்கள் 8,9,10,11,12-ஆம் வகுப்புகள் தமிழ்நாட்டில் படித்துள்ளீரா என்பதை குறிப்பிடவும்.

10. தாங்கள் 8,9,10,11,12- ஆம் வகுப்பு, படித்த பள்ளியின் பெயர், ஊர், மாவட்டம் மற்றும் மாநிலத்தின் பெயரை அந்தந்த வகுப்பிற்கு எதிராக தனித் தனியாக எழுதவும்.

    - தாங்கள் 8,9,10,11,12 ஆகிய வகுப்புகள் தமிழ்நாட்டில் படித்திருந்தால் தாங்கள் தமிழ்நாட்டை சேர்ந்தவராக கருதப்படுவீர். (10 – ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழின் நகலை இணைக்கவும்)
    - தாங்கள் தமிழ்நாட்டை சேர்ந்தவராக இருந்தும் (Native of Tamil Nadu) 8,9,10,11,12-ல் ஏதாவது ஒரு வகுப்பு வெளி மாநிலத்தில் படித்திருந்தால் தங்கள் தந்தையின் பூர்வீக சான்றிதழ் (Nativity Certificate - Certificate No.1) தமிழ்நாட்டில் உள்ள வட்டாட்சியரிடம் பெற்று நகலை இணைக்க வேண்டும். இல்லையேல் தங்களுடைய விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
    - தங்களுடைய பெற்றோர் தற்போது தமிழ்நாட்டில் கடந்த ஐந்தாண்டு காலமாக தொடர்ந்து அரசு, அரசு சார்ந்த அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வேலை செய்பவராக இருந்தால் அந்த நிறுவனத்தில் இருந்து கடந்த ஐந்தாண்டு காலமாக தொடர்ந்து தமிழ்நாட்டில் வேலை செய்து கொண்டு இருப்பதற்கான சான்றிதழ் பெற்று நகலை இணைக்க வேண்டும். இல்லையேல் தங்களுடைய விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
    - தமிழ்நாட்டை சேராத தமிழ்நாட்டிற்காக ஒதுக்கப்பட்ட இந்திய அரசுப் பணியின் அதிகாரிகளின் (I.A.S., I.P.S., I.F.S., etc.) மகன்கள் / மகள்கள் பொதுப்பிரிவிற்கு தகுதி உடையவர்கள் ஆவார்கள்.

11. தாங்கள் எந்தக் கல்வித் தகுதித் தேர்வில் (H.Sc./ CBSE, etc.) தேர்ச்சி பெற்றுள்ளீர்கள் என்பதை குறிப்பிடவும்.

12. தாங்கள் தேர்ச்சி பெற்ற கல்வித் தகுதித் தேர்வு எந்த வாரியத்தால் நடத்தப்படுகிறது என்பதை பிற்சேர்க்கை 3 – ல் (Annexure-III) உள்ள எண்ணைப் பார்த்து எழுதவும்.

13. கல்வித் தகுதித் தேர்வில் தாங்கள் தேர்ச்சி பெற்று விட்டீர்களா? இல்லையா? என்பதை குறிப்பிடவும். (மதிப்பெண் பட்டியலின் சான்றொப்பமிடப்பட்ட நகலை இணைக்கவும்).

14. தாங்கள் தேர்ச்சி பெற்ற கல்வித் தகுதித் தேர்வின் (+2) பதிவு எண், தேர்ச்சி பெற்ற மாதம் மற்றும் வருடத்தினை மதிப்பெண் பட்டியலை பார்த்து எழுதவும். (H.Sc. தேர்வின் அனுமதி சீட்டின் நகலை இணைக்கவும்).

15. பொதுப் பாடப் பிரிவு மாணவர்கள் / மாணவியர்கள்

தாங்கள் இயற்பியல், வேதியியல், கணிதம் மற்றும் நான்காவது விருப்பப் பாடத்தில் பெற்றுள்ள மதிப்பெண்களை அதற்கு உண்டான கட்டத்தில் எழுதவும்.

தங்களுடைய மதிப்பெண் பட்டியலில் உள்ள பாடத் தொகுப்பு எண்ணை (Group Code) எழுதவும்.

16. தொழிற் பாடப் பிரிவு மாணவர்கள் / மாணவியர்கள்

தொழிற் பாடப் பிரிவு மாணவர்கள் / மாணவியர்கள் கணிதம், இயற்பியல் அல்லது வேதியியல் இந்த மூன்றில் ஒன்றையோ அல்லது இரண்டையோ சார்ந்த பாடமாக (related subject) படித்திருத்தல் வேண்டும்.

தாங்கள் தொழிற் பாடப்பிரிவை படித்திருந்தால், அதைச் சார்ந்த (related subject) பாடப்பிரிவின் மதிப்பெண் மற்றும் தொழிற் பாடப்பிரிவின் மதிப்பெண்களை மதிப்பெண் பட்டியலில் உள்ளவாறு எழுதவும்.

தாங்கள் படித்த தொழிற் பாடப் படிப்பு, கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள ஏதாவது ஒரு பிரிவாக மட்டுமே இருக்க வேண்டும். மற்ற பிரிவுகள் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

17. தாங்கள் ஏதாவது ஒரு சிறப்பு ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிப்பதாக இருந்தால் (முன்னாள் இராணுவ வீரர்களின் மகன் / மகள், சுதந்திர போராட்ட தியாகிகளின் மகன் / மகள் மற்றும் ஊனமுற்றோர்கள்) அதற்குரிய படிவத்துடன் சிறப்பு ஒதுக்கீட்டிற்கான சான்றிதழைப் பெற்று அதனுடைய நகல் மற்றும் ரூ.100/-க்கான வரைவு காசோலையையும் (Demand Draft) சேர்த்து அனுப்பவும்.

18. சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீட்டின்கீழ் விண்ணப்பிப்பவர்கள் அதற்குரிய படிவம் மற்றும் மாணவர்களுக்கான தகவல் மற்றும் வழிமுறைகள் புத்தகத்தில் கேட்கப்பட்டுள்ள சான்றிதழ்களுடைய நகல்கள், விளையாட்டில் பெற்றுள்ள சான்றிதழ்களின் நகல்கள் மற்றும் ரூ.100/-க்கான வரைவு காசோலையையும் (Demand Draft) இணைத்து சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் செயலர், தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை (TNEA) அவர்களிடம் நேரடியாக சமர்ப்பிக்கவும்.

19. தாங்கள் விண்ணப்பத்தில் எழுதியுள்ள தகவல்களை Coding Sheet-ல் அதற்குரிய இடங்களில் சரியாக எழுதி அதற்கான கட்டங்களை நிரப்பவும் (shade). Coding Sheet-ஐ விண்ணப்பத்துடன் உதிரியாக விண்ணப்ப உறையில் வைத்து அனுப்பவும்.

20. தாங்கள் இணைக்கும் ஒவ்வொரு நகலிலும் தங்களுடைய பொறியியல் சேர்க்கை விண்ணப்பத்தின் பதிவு எண்ணை வலது கோடி மேல் புறத்தில் எழுதவும்.

21. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் தேவையான இணைப்புகளுடன் 31.5.2010க்குள் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ வந்து சேரும்படி அனுப்பி வைக்கவும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

22. தாங்கள் பட்டியலில் உள்ளவாறு பிரிவு வாரியாக குறைந்தபட்ச மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். இல்லையேல் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

| வ. எண் | பிரிவு | பொதுப் பாடப் பிரிவு (H.Sc. Academic & Others) | தொழில் பாடப் பிரிவு (H.Sc. Vocational) |
|---|---|---|---|
| | | இயற்பியல், வேதியியல் மற்றும் கணித மதிப்பெண்களின் ஒட்டு மொத்த கூட்டுத் தொகையின் சதவிகிதம் | சார்ந்த பாடப் பிரிவு மற்றும் தொழில் பாடப்பிரிவு மதிப்பெண்களின் ஒட்டு மொத்த கூட்டுத் தொகையின் சதவிகிதம் |
| 1 | பொதுப் பிரிவினர் | 55 மற்றும் அதற்கு மேலும் | 55 மற்றும் அதற்கு மேலும் |
| 2 | பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இஸ்லாமியர்கள் | 50 மற்றும் அதற்கு மேலும் | 50 மற்றும் அதற்கு மேலும் |
| 3 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் | 45 மற்றும் அதற்கு மேலும் | 45 மற்றும் அதற்கு மேலும் |
| 4 | பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் இனத்திலுள்ள அருந்ததியர்கள் மற்றும் மலைவாழ் பழங்குடியினர் | மேல் நிலைக் கல்வித் தேர்வில் தேர்ச்சி | மேல் நிலைக் கல்வித் தேர்வில் தேர்ச்சி |

விரிவான விளக்கங்களுக்கு 'மாணவர்களுக்கான தகவல் மற்றும் வழிமுறைகள்' (Information and Instructions to Candidates) புத்தகத்தை படித்து தெரிந்து கொள்ளவும்.

****